**திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் - திருபா.முருகேஷ், இ.ஆ.ப.,**

செ.மு.எண்.அ3/8044/2022. நாள்-25.02.2022

பொருள் : பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி — திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலகு — 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட 10 இளநிலை வருவாய் ஆய்வாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்தி உத்தரவிடப்படுகிறது.

படிக்கப் பட்டவை:
1. அரசாணை (நிலை) எண்- 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ1)த் துறை, நாள்- 26.02.2021
2. சென்னை, கூடுதல் தலைமை செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண்-ஆ.கு.3/18395/2020, நாள்-06.08.2021
3. திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலுவலரின் செயல்முறைகள் எண்-அ3/747/2018 நாள்- 31.08.2021
4. சென்னை, கூடுதல் தலைமை செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண்.ஆ.கு2/24163/2020, நாள்-12.10.2021 மற்றும் 28.10.2021.
5. சென்னை, கூடுதல் தலைமை செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண்.ஆ.கு3/18395/2020, நாள்-01.11.2021 மற்றும் 22.11.2021.
6. திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலுவலரின் செயல்முறைகள் எண்-அ3/747/2018 நாள்: 09.11.2021.
7. தொடர்புடைய ஆவணங்கள்.

<><><><><>

**ஆணைகள்-**

அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ1)த் துறை, நாள்-26.02.2021 மற்றும் பார்வை 2-ல் படிக்கப்பட்ட சென்னை, கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளதன்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி-4க்கு உட்பட்ட பணியிடமான இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியிடத்திற்கு, பணி நியமன அலுவலர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) என்ற நிலையில் ஒரு நிலை

Scanned with CamScanner

கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர் **(One level higher than the appointing authority)** மாவட்ட வருவாய் அலுவலர் என்பதால் திருவண்ணாமலை வருவாய் அலகில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட, எந்த வித விதித்தளர்வும் **(Relaxation of Rules)** மற்றும் அரசாணைகளுக்கு விலக்கும் **(Exemption of Government Orders)** தேவைப்படாத **10 இளநிலை வருவாய் ஆய்வாளர்களுக்கு** மேற்கண்ட வழிக்காட்டுதளின்படி, அவர்களது பணியினை, அவர்கள் பணியில் சேர்ந்த நாளினை அடிப்படையாக கொண்டு அவர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்ட நாளில் பணிவரன்முறை செய்து பார்வை 3-ல் படிக்கப்பட்ட செயல்முறைகளில் உத்தரவிடப்பட்டது.

இந்நேர்வில், பார்வை 4-ல் படிக்கப்பட்ட சென்னை, கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் **02.02.2016** முதல் **31.12.2019** வரை மாவட்ட ஆட்சியரால் செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியினை மாவட்ட வருவாய் அலுவலரால் பணிவரன்முறை செய்யப்பட்டிருந்தால் அதனை இரத்து செய்தும், தனியர்களது பணியினை வரன்முறை செய்வது தொடர்பான முன்மொழிவுகளை வருவாய் நிருவாக ஆணையரகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் தெரிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, **10 இளநிலை வருவாய் ஆய்வாளர்களின்** பணியினை அவர்கள் பணியில் சேர்ந்த நாளினை அடிப்படையாக கொண்டு பணிவரன்முறை செய்து, உத்தரவிடப்பட்ட பார்வை 3-ல் படிக்கப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலரின் செயல்முறைகள் பார்வை 6-ல் படிக்கப்பட்ட செயல்முறைகளின்படி இரத்து செய்து உத்தரவிடப்பட்டது.

இந்நேர்வில், பார்வை 5-ல் படிக்கப்பட்ட சென்னை, கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதங்களில், மேற்படி **02.02.2016** முதல் **31.12.2019 வரை** கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வும் தேவைப்படாத பணியாளர்களுக்கு இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு பணிநியமன அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்(பொது) என்ற நிலையில், ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர் மாவட்ட வருவாய் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில்

Scanned with CamScanner

பணிநியமனம் செய்யப்பட்ட அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், பார்வை 1-ல் படிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ 1)த் துறை, நாள்-26.02.2021-ன்படி இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியிடத்திற்கு பணிநியமன அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்(பொது) என்ற நிலையில் **02.02.2016** முதல் **31.12.2019** வரை **கருணை அடிப்படையில் பணி நியமனம்** செய்யப்பட்ட **கீழ்கண்ட 10- இளநிலை வருவாய் ஆய்வாளர்களின்** <u>(எந்த வித விதித்தளர்வும் (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கும் (Exemption of Government Orders) தேவைப்படாத இனங்கள்)</u> பணியினை, அவர்கள் பணியில் சேர்ந்த நாளினை அடிப்படையாக கொண்டு அவர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்ட நாளில் பணிவரன்முறை செய்தும், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணித்தொகுதி விதிகளின் விதி 23(அ)-ன்படி தகுதிகாண் பருவம் தொடங்கியும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்கள்) | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்தும், தகுதிகாண் பருவம் துவக்கியும் உத்தரவிடப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | **ர.கலைவாணி,**<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>திருவண்ணாமலை. | 19.09.2018 முற்பகல் | 19.09.2018 முற்பகல் |
| 2. | **ஜெ.லோகேஷ்,**<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்<br>வெம்பாக்கம் | 19.09.2018 முற்பகல் | 19.09.2018 முற்பகல் |
| 3. | **ஏ.ராஜபாண்டியன்,**<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>கீழ்பென்னாத்தூர் | 19.09.2018 முற்பகல் | 19.09.2018 முற்பகல் |
| 4. | **பிபவித்ரா,**<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>திருவண்ணாமலை. | 19.09.2018 முற்பகல் | 19.09.2018 முற்பகல் |
| 5. | **மூபிரபாகரன்,**<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>வந்தவாசி | 08.10.2018 முற்பகல் | 08.10.2018 முற்பகல் |

Scanned with CamScanner

| | | | |
|---|---|---|---|
| 6. | மு.சுப்புலட்சுமி<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>சேத்துப்பட்டு | 08.02.2019<br>பிற்பகல் | 08.02.2019 பிற்பகல் |
| 7. | பூ.நந்தகுமாரி<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வருவாய் கோட்ட அலுவலகம்,<br>ஆரணி. | 01.03.2019<br>முற்பகல் | 01.03.2019 முற்பகல் |
| 8. | பெ.தமிழரசி<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>திருவண்ணாமலை | 08.03.2019<br>முற்பகல் | 08.03.2019 முற்பகல் |
| 9. | இரா.ரஞ்சித்<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>திருவண்ணாமலை. | 22.08.2019<br>முற்பகல் | 22.08.2019 முற்பகல் |
| 10. | ஏ.ஜானகிராமன்<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>ஆரணி | 22.08.2019<br>முற்பகல் | 22.08.2019 முற்பகல் |

மேற்கண்ட இளநிலை வருவாய் ஆய்வாளர்களின் பணியினை வரன்முறை செய்யப்பட்ட இவ்வாணையினை தனியர்களது பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகளை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டியது.

ஒம்/- பா.முருகேஷ்.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருவண்ணாமலை.

/உத்தரவுப்படி/

25/1/7

மாவட்ட ஆட்சித்தலைவரின்
நேர்முக உதவியாளர்(பொது),
திருவண்ணாமலை

**பெறுநர்**
சம்மந்தப்பட்ட நபர்கள்.
- தொடர்புடைய அலுவலக தலைவர் மூலமாக.

நகல்- தொடர்புடைய அலுவலர்கள்.

Scanned with CamScanner

நகல்- முதன்மை செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், சென்னை-5.

நகல்- மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்), திருவண்ணாமலை.

நகல்- கருவூல அலுவலர், மாவட்ட கருவூலகம், திருவண்ணாமலை.

நகல்- அ3'இருக்கை சம்மந்தப்பட்ட கோப்பிற்கு / இருப்பு கோப்பிற்கு.

Scanned with CamScanner